**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 205/2022 PW .1**

பெயர் : பிரியதர்ஷினி தந்தை/கணவர் பெயர்: மூர்த்தி

| | | | |
|---|---|---|---|
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>10.03.2026 முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். எதிரி எனது சித்தப்பா ஆவார். 14.08.2022ம் தேதி கொடி ஏற்றுவதற்காக எனது வீட்டு மாடிக்கு சென்றேன். அப்போது எதிரி நான் ஓட்டில் கல்லை வீட்டு எறிந்ததாக சொல்லி தேவுடியா என்று அசிங்கமாக திட்டினார். நான் வீட்டிற்கு வந்து ரூம்பில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தேன். எனது அம்மா என்னவென்று கேட்டார். நான் சொன்னேன். நானும், எனது அம்மாவும் வெளியே வந்த போது எதிரி என்னை வீட்டிற்கு வெளியே கீழே தள்ளி அடித்தார். அவர் கையில் பிளேடு போன்று ஆயுதம் வைத்து என்னை கீறியதால் எனக்கு chest –ல் இரத்தம் வந்து விட்டது. என்னை கழுத்தை பிடித்து நெறித்ததில் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது.

2. எனது அம்மா தடுக்க வந்த போது எனது அம்மாவையும் ரோட்டில் இழுத்து போட்டு அடித்தார். எனது தம்பியை அடித்ததில் எனது தம்பிக்கு கண்ணில் காயம் பட்டு பிரச்சனை ஏற்பட்டது. எதிரியின் மகள் காயத்ரி, மகன் இராஜபாண்டி அவர் அப்பா அடித்து முடித்ததும் கம்பை எடுத்துவந்து எங்களை அடித்தார்கள். எனது அப்பா குளித்துக்கொண்டிருந்ததால் அவருக்கு சம்பவம் பற்றி தெரியாது. எதிரி செங்களை வைத்து எனது தம்பி மீது எறிந்ததால் எனது தம்பியின் நெற்றியில் காயம் ஏற்பட்டது. எனது பெற்றோர்கள் காயம் பட்ட என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு அளித்து வந்தார்கள் . நான் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனது அம்மாவிற்கு பல்லில் முறிவு ஏற்பட்டது.

3.என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் . நான் சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் குகன் , பாலு ஆகியோர் வந்து விசாரிக்க நான் சொல்ல , சொல்ல அவர்கள் எழுதி கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி குகன் மற்றும் பாலு என்னை எதிரிக்கு ஆதரவாக டார்ச்சர் செய்ததால் நான் எலிமருந்தை குடித்து, மீண்டும் ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . **(அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4. எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வர வில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.